வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 2856 /அ3/2021, நாள். .09.2021

பொருள்: பொதுமாறுதல் 2021–2022– ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – மாநில மற்றும் மாவட்ட திட்ட அலுவலகங்கள், வட்டார மற்றும் தொகுப்பு வள மையங்களில் பணிபுரிந்து வரும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் பணி மாறுதல் கலந்தாய்வு மற்றும் பொது மாறுதல் கலந்தாய்வு நடத்துதல் –சார்பு.

பார்வை: 1. அரசாணை(1டி) எண். 134, பள்ளிக்கல்வித் (பக5(1)) துறை நாள். 18.08.2021.
2.சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள், ந.க.எண். 47119/சி4/இ1/2021, நாள். 13.09.2021.

---

பள்ளிக்கல்வித்துறையில் 2021–2022ஆம் கல்வியாண்டிற்கு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் மாநில மற்றும் மாவட்ட திட்ட அலுவலகங்கள், வட்டார மற்றும் தொகுப்பு வள மையங்களில் பணிபுரிந்து வரும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களாக அரசு உயர்/ மேல்நிலைப்பள்ளிகளுக்கு பணி மாறுதல் கலந்தாய்வு வழங்குதல் சார்பாக பார்வை 1இல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2இல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகளின்படி 15.09.2021 புதன்கிழமை காலை 08.30மணியளவில் வேலூர் காட்பாடி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலகத்தில்(SSA Office, Katpadi) நடைபெறும் கலந்தாய்விற்கு இணைப்பிலுள்ள ஆசிரியர் பயிற்றுநர்கள் கலந்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பணிமூப்பு அடிப்படையில் பட்டதாரி ஆசிரியராக பணிமாறுதல் செய்யப்பட வேண்டிய மூத்த ஆசிரியர் பயிற்றுநர் பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களும் பட்டதாரி ஆசிரியர் பணிமாறுதலுக்கான கலந்தாய்வில் கலந்துக்கொள்ள வேண்டும். கலந்தாய்வில் கலந்துக்கொள்ளாமல் இருந்தாலோ அல்லது இடத்தை தெரிவு செய்யாது இருந்தாலோ பள்ளிக்கல்வி இணைஇயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களால் காலியாக உள்ள ஒரு பள்ளிக்கு பணிமாறுதல் ஆணை வழங்கப்படும். இதில் விருப்பமின்மை தெரிவித்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என திட்ட வட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பட்டியல்

ஒ.ம் .xxxxxxxxxx
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
இணைப்பிலுள்ள ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
நகல்
கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலகம், காட்பாடி, வேலூர்.(தொடர் நடவடிக்கைக்காக)